பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

மலர் 19 கார்த்திகை 7 ஜு•ஹஜ் 10 இதழ் 282
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 22-11-77

# வீரவரவேற்பளிக்க எகிப்திய மக்கள் தயாராகின்றார்கள்

கெய்ரோ, நவ 21

நாளை நாடு திரும்பும் எகிப்திய அதிபர் அன்வர் சதாத்துக்கு தாயகத்தில் வீர வரவேற்பு காத்திருக்கிறது!

எகிப்திய அதிபரை வீர புருஷராக வரவேற்க எகிப்திய மக்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றார்கள் என்று கெய்ரோ வானொலி இன்று அறிவித்தது.

இதற்கிடையே, எகிப்திய அதிபரும், இஸ்ரேலியப் பிரதமரும் நடத்திய பேச்சுக்கள், உறுதியான சமரசத்தை ஏற்படுத்தும் என்று அரசியல் அவதானிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

1973-ல் மூண்ட யுத்தமே கடைசி யுத்தமாக இருக்க வேண்டும். இதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருப்பதாக எகிப்திய அதிபர் ஜெரூஸலத்தில் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார். யுத்தமோ, அல்லது இரத்தக் களரியோ இனி மேலும் நடக்க முடியாதபடி ஒப்பந்தம் வந்திருக்கிறது. இப்போதைய பேச்சுக்கள் இனி மேலும் தொடரும். இதற்காக அடுத்த மாதம் கெய்ரோ செல்கின்றேன்' என்று இஸ்ரேலியப் பிரதமர் தெரிவித்தார்.

சமாதான உடன்படிக்கை ஏற்பட்ட பின்னரே இருநாடுகளுக்குமிடையிலான ராஜதந்திர உறவுகள் மலரும் என்றும் இஸ்ரேலிய பிரதமர் தெரிவித்தார்.

......

# ஆந்திரா, தமிழ்நாடு கோர புயலுக்கு 7000 பேர் பலி $2\frac{1}{4}$ லட்சம் வீடுகள் அழிவு

## தஞ்சையில் மட்டும் லட்சம் தென்னைமரங்கள் சரிந்தன

ஹைதராபாத், நவ. 21

கடந்த சனிக்கிழமைவீசிய கோரப்புயலின் தாண்டவத்தினால், ஆந்திரப் பிரதேசத்தின் கடற்கரைப் பகுதிகள் சின்னாபின்னமாகிவிட்டன! புயல், மழை காரணமாக தமிழ்நாட்டிலும், ஆந்திரப் பிரதேசத்திலும் சுமார் 7,000 மக்கள் பலியாகிவிட்டனர்!

ஆந்திரப் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை வீசிய புயலினால் ஆறாயிரத்துக்கும் அதிகமானவர்கள் மாண்டனர் என்று ஆந்திரப் பிரதேச முதல்அமைச்சர் இன்று அறிவித்தார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளை விமான மூலம் சுற்றிப் பார்வையிட்டபின்னரே இத்தகவலை அவர் வெளியிட்டார்.

கிருஷ்ணா மாவட்டத்தில் மட்டும் கடல் கொந்தளிப்பு காரணமாக பத்துக்கிராமங்கள் அழிந்துவிட்டன. 5 மாவட்டங்களில் 1,600 பேர் மாண்டனர். பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்துக்கும் 1000 ரூபா நிவாரண உதவி வழங்கப்படுகிறது என்று முதல்வர் தெரிவித்தார்.

இதற்கிடையே, தமிழ்நாட்டில் புயலினாலும்வெள்ளத்தினாலும் மாண்டவர் தொகை 409 ஆக அதிகரித்திருப்பதாக தமிழ்நாடு ஆளுநர் இன்று தெரிவித்தார்.

புயல், மழையினால் 2,28,000 வீடுகள் அழிந்துவிட்டன. தஞ்சாவூரில் மட்டும் ஒரு லட்சம் தென்னை மரங்கள் வேருடன் சாய்ந்துவிட்டன. 193 பேரை இன்னும் காணவில்லைஎன்று தமிழக ஆளுநர் இன்று தெரிவித்தார்.

புயலினாலும், மழையினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இன்று இந்திய லோகசபையில் அனுதாபத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. அங்கத்தவர்கள் ஒரு நிமிட நேரம் எழுந்துநின்று அஞ்சலி செலுத்தினர்.

# ஸ்ரீ சத்ய சாயிபாபா பிறந்ததினவிழா

[யாழ்ப்பாணம்]

பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் 52-வது பிறந்ததின விழாவை நாளை மாலை யாழ்ப்பாணத்தில் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மத்திய பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா சேவா சமித்தி, ஸ்ரீ சாயிபாபாவின் பிறந்ததின விழாவை நாளை பிற்பகல் 5 மணிக்கு யாழ். ரசிக ரஞ்சன சபா மண்டபத்தில் கொண்டாடுகிறது.

......

# தொழில் நுட்ப வணிக மாணவருக்கு சலுகை

[யாழ்ப்பாணம்]

தொழில் நுட்பக் கல்லூரிகளில் வணிகத்துறையில் பயின்று அதன் பரீட்சையில் ஒரு பாடத்தில் சித்தி பெறாத மாணவர்களுக்கு நூனசித்தி வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை இவ்வாறு ஒரு பாடம் சித்திபெறாதவர்களுக்கு நூனசித்தி வழங்கப்படாததினால் அம்மாணவர்கள் மீண்டும் சகல பாடங்களுக்கும் தோற்ற வேண்டியிருந்தது.

புதிய அனுமதியின் பேரில் சித்திபெறாத ஒரு பாடத்திற்கு மட்டும் மாணவர்கள் மீண்டும் தோற்றி பரீட்சையைப் பூர்த்தி செய்யலாம்.

யாழ். பல்தொழில் நுட்பக் கல்லூரி முன்னாள் வணிக மாணவர் மன்றத் தலைவர் திரு. ஜே. பி. பாக்கியராஜா கல்வி அமைச்சு அதிகாரிகளுடன் நேரில் பேச்சுவார்த்தை நடத்தியதை அடுத்து கல்வி அமைச்சரின் பணிப்பின்பேரில் இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ)

# அடக்கி ஆளப்படும் நிலை மாற்றப்பட வேண்டும் - தேசிய அரசுபேரவையில் திருகோணமலை எம்.பி.

(கொழும்பு)

முப்பது ஆண்டுகளாக தமிழ் மக்கள் இந்த நாட்டில், சுதந்திரமற்ற நிலையில், அடக்கிஆளப்பட்டு வருகின்றனர். பெரும்பான்மை இனத்தவரால் அடக்கியாளப்படும் நிலையில் சிறுபான்மையினர் இன்று வாழ்ந்துவருகின்றனர். இந்த நிலை மாற்றப்பட வேண்டும்! முன்னைய அரசாங்கம் அடக்குமுறைகளைக் கையாண்டு படுதோல்வி கண்டதை ஒரு படிப்பினையாக இந்த அரசு நினைவில் கொண்டு பாரபட்சமற்ற முறையில் நீதியாக செயல்படவேண்டும்.

தேசியஅரசுப்பேரவையில் நேற்று வரவு-செலவுத்திட்டத்தின் மீதான விவாதத்தில், திருகோணமலை தேசியஅரசுப் பேரவை உறுப்பினர் திரு. இரா. சம்பந்தன் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

"புதிய அரசாங்கம் சமர்ப்பித்துள்ள வரவு-செலவுத்திட்டத்தில் பங்கீட்டு மானியம் நிறுத்தப்படும் யோசனை; இன்று நாடு அபிவிருத்திக்கு பிச்சை எடுக்கும் நிலையை மாற்றும் புரட்சிகரமான யோசனையாக உள்ளது என்று பாராட்டுத் தெரிவித்த திரு இரா. சம்பந்தன், "ஐ. தே. கட்சியினர் கடந்த தேர்தலில் 140 ஸ்தானங்களைப் பெற்றிருந்தாலும், 90.4 விகிதமான வாக்குகளைப் பெற்றது, தமிழர் விடுதலைக்கூட்டணி, சிறுபான்மையினரின் 94.7 விகிதமான வாக்குகளைப் பெற்றுள்ளது. இன்று எதிர்க்கட்சியினராக விளங்கினாலும் பாரபட்சமற்ற முறையில் அவர்களுக்கும் நீதி வழங்க வேண்டும்" என்று கூறினார்.

கிழக்கு மாகாணத்தில் ஐக்கியதேசியக்கட்சி பிரமுகர்கள் வெற்றிபெற்றாலும்; 4 தமிழர் விடுதலைக்கூட்டணியினருக்கே. அதிகப்படியான வாக்குகள் கிடைத்திருக்கின்றன. திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் மிகக்குறைந்த வாக்குகளால் வெற்றிபெற்று இன்றுபாராளுமன்றத்தில் உள்ளார். இவரை வைத்து தமிழர் பிரச்னைக்கு தீர்வு காணமுடியாது,

"நாட்டில் உண்மையான ஜனநாயகம் நிலைக்கவேண்டுமானால் எதிர்க்கட்சி, ஆளும் கட்சி என்று பாரபட்சம் காணாமல், இனவாதம் கொள்ளாமல் தகுதி அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படவேண்டும்" என்றும் அவர் கூறினார்.

இதற்குப் பதிலளித்த நிதியமைச்சர் திரு. ரொனி டி மெல் தமது அமைச்சின் உயர் பகுதியில் 2 தமிழர், 1 முஸ்லிம், 1 சிங்களவர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

அப்போது குறுக்கிட்ட திரு சம்பந்தன் இங்கு நான் இனவாதம்பேசவரவில்லை. தகுதியடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படவேண்டுமெனத் தான் வற்புறுத்துகின்றேன் என்று கூறினார். (ம)

ஷா கமிஷன் முன்னிலையில்

# இந்திராகாந்தி ஆஜராகவில்லை!

புதுடில்லி, நவ. 21

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இன்று ஷா கமிஷன் முன் ஆஜராகவில்லை!

நெருக்கடிகால ஒழுங்கு மீறிய செயல்கள் பற்றி விசாரணைசெய்துவரும் ஷா கமிஷனின் நடைமுறைகள் சட்டத்திற்கு விரோதமானது என்றும் தம்மீது மாசு கற்பித்து தம்து அரசியல் நடவடிக்கைகளை இழிவுபடுத்தும் நோக்குடனேயே தாம் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளதாக திருமதி இந்திராகாந்தி தெரிவித்துள்ளார்.

ஷா கமிஷன் முன் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டிருந்தும், திருமதி காந்தி இன்று அங்கு ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டிருந்தும் திருமதி காந்தி இன்று அங்கு ஆஜராகவில்லை!

திருமதி காந்திக்குப் பதிலாக ஆஜரான அவரது வழக்கறிஞர் கமிஷன் முன்னிலையில் சமர்ப்பித்த திருமதி காந்தியின் அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

கமிஷன் முன்னிலையில் தாம் ஆஜராகுவதில் எதுவித பயனும் இல்லைஎன்றும், பத்திரிகைகள் நடத்தும் விசாரணையாகவே தமக்குப் படுவதாகவும், சட்டப்படி நடந்தால் நிச்சயம் ஆஜராகுவதில் எதுவித பயனும் இல்லையென்றும் பத்திரிகைகள் நடத்தும் விசாரணையாகவே தமக்குப் படுவதாகவும் கமிஷன் சட்டப்படி நடந்தால் நிச்சயம் ஆஜராவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொள்ளைச் சம்பவங்கள் குறைகின்றன

# முக்கிய நபர்கள்மீது பொலிஸ்வலைவீச்சு

[யாழ்ப்பாணம்]

யாழ். அரசடி கொள்ளை தொடர்பாக, புதிதாக நிறுதப்பட்டுள்ள துப்புத்துலக்குப் பிரிவினர், 3 சந்தேக நபர்களை கைதுசெய்ததுடன் உருக்கிய நிலையில் 30 தங்கப் பவுணையும் கைப்பற்றியுள்ளனர்.

துப்புத்துலக்கும் பிரிவு இன்ஸ்பெக்டர் திரு. இராமநாதன் சப் இன்ஸ்பெக்டர் முத்துபண்டா, சப் இன்ஸ்பெக்டர் ரம்மணபண்டா ஆகியோரே, திடீர் விசாரணை மேற் கொண்டு, துப்புத்துலக்கியுள்ளனர்.

யாழ். அரசடி வீதி வீடொன்றில் 10 வயது சிறுவனை பணயமாக வைத்து துப்பாக்கி முனையில் சுமார் 22,000 பெறுமதியான நகைகளை இளைஞர் கோஷ்டியொன்று கொள்ளையடித்துச் சென்றது.

சந்தேகத்தின் பேரில் இராசநாயகம், துரைசிங்கம்,பாலசுப்பிரமணியம் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர் மற்றும் இரு சந்தேக நபர்களான நடராசா, தியாகலிங்கம் ஆகியோரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

துப்புத் துலக்கும் பிரிவினரின் துரித நடவடிக்கைகளைத்

(6-ம் பக்கம் பார்க்க)

எனது இலக்கம் LEG/L/184/J

## பிரசித்த ஏல விற்பனை

1977ம் ஆண்டு மார்கழிமாதம் 7ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் காங்கேசன் துறைவீதி 525/1 வீட்டு இலக்கம் தற்போது வீட்டு இலக்கம் 977/1 வாசிகளாகிய முத்துத்தம்பி அப்புலிங்கமும் மனைவி அன்னலெட்சுமியும் 1974ம் ஆண்டு ஆனிமாதம் 2ம் திகதி யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிஸ் திரு அ. விஸ்வநாதன் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 205ம் இலக்க ஈட்டு உறுதியின்படி . 15-11-76 வரைக்கும் கட்டத்தவறிய ரூபா 12,792 சதம் 23. இதில் 15-11-76இன் பின் கொடுக்கப்பட்ட தொகை கழிவாக, மேலும் ரூபா 11 500/-க்கு 16-11-76 தொடக்கம் விற்பனைநாள் வரையும் 7வீத வட்டியும் சேர்த்து முழுத்தொகையும் அறவிட குறிப்பிட்ட ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய அபராதத் தொகையையும் அக்கடன் தொகையை மீட்பதற்கு ஏற்பட்ட செலவுத் தொகையையும் அறவிடுவதற்காக யாழ்ப்பாண தேசிய வீடமைப்பு உதவி ஆணையாளரின் உத்தரவின்படியும் எனக்குக் கிடைத்த அதிகாரத்தின்படியும் கீழ் அட்டவணையில் காட்டப்பட்ட காணியையும் அதற்குச் சேர்ந்தவைகளையும் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### காணியின் அட்டவணை

வடமாகாண யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார்பண்ணைவட மேற்கு இறை 'பூதன்வளவு' என்னும் மூன்று (3) துண்டுக் காணியின விஸ்தீரண உறுதியின்படி நிலப்பரப்பு நாலு (4) ஆனால் அளவின்படி நிலப்பரப்பு நான்கும் (4) ஏழுதசம் (7) ஒன்பது (9) (7.9) குழியும். இதில் நிலப்பரப்பு இரண்டு (2) மேற்குப்பக்கமாக (யாழ்ப்பாணக் காணிக்கந்தோரில் உள்ளபடி 386/175 இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டது) ஆனால் 1973 டிசம்பர் 3ம் திகதி தயாரிக்கப்பட்ட இலக்கம் 564ம் வரைபடத்தில் 2ம் துண்டுக் காணியெனவும் அதன் விஸ்தீரணம் அளவின்படி நிலப்பரப்பு ஒன்றும் (1) பதின் மூன்று தசம் ஒரு குழியும் (13.1) கிணறும் செய்பயிர் வான் பயிர்களும் அடங்கியுள்ளது. இக்காணிக்கு எல்லையாக இம் மாதிரிப்படத்தில் கோவில் இருக்கின்ற 3ம் துண்டுக்காணியும் வடக்கு ஒழுங்கையும் வ. நாகலிங்கத்தின் ஆதனமும் மேற்கு இம்மாதிரிப்படத்தில் காட்டப்பட்டுள்ள 1ம் துண்டுக் காணியும் தெற்கு அரசடி ஒழுங்கையும் வீட்டிலக்கம் 977/1 22ம் வட்டாரம் காங்கேசன்துறை வீதியிலுள்ள கல்லால் கட்டப்பட்ட குறைவீடும் இதடங்கலும்.

ஏ. ப. பிறின்ஸ் எதிர்மன்னசிங்கம்
(உத்தரவுபெற்ற விற்பனையாளரும்மதிப்பாளரும்)

107, பிரதானவீதி,
யாழ்ப்பாணம்,
1977-10-03. 7708

## கோட்டு விற்பனவு விளம்பரம்

MB 1393

1, சுப்பிரமணியம் அம்பலவாணரும் பெண் 2. ஆச்சிமுத்துவும்
வட்டுக்கோட்டை மேற்கு — வழக்காளி

எதிராக

1. முத்தையா சிவரத்தினமும் பெண் 2. புனிதவதியும்
வட்டுக்கோட்டை மேற்கு — எதிராளி

மல்லாகம் டிஸ்றிக் கோட்டின் MB/1393ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1977ம் ஆு கார்த்திகை மீ 29ந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-45 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 22508/-ம் 27-8-76 தொடக்கம் 2-5-77 வரைக்கும் ரூபா 18000/- 6 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 9 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 855-38 சதம்.

### ஆதன விப்ரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானைக் கோவிற்பற்று தொல்புரம் இறை நெல்லியான் பரப்பு நெல் இலாச்சம் பதினொன்று (ப. நெ இ. 11) வடகிழக்கு மூலையில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும், எல்லை கிழக்கு இராமநாதன் பெண் சரஸ்வதிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கும் தெற்கும் 2ம் எதிராளிக்குரிய ஆதனம், மேற்கு சண்முகம் பெண் மாணிக்கத்தின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலும்,

2. மேற்படி வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்கும் மேற்கும் இறை தம்பகப்பனையும் மறு பிரிவுகளும் பரப்பு நில இலா 6 குழி 8 வீடும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு திருநாவுக்கரசு பெண் மனோன்மணிக்குரிய ஆதனம், மேற்கு திருநாவுக்கரசு பெண் மனோன்மணிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு சோமசுந்தரம் பெண் தங்கச்சியம்மாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதில் இதன் தெற்கெல்லை அருகாகத் தங்கச்சியம்மாவுக்குமுரிய காணிக்குப் போக்குவரத்துச் செய்யும் ஆறுமுழ அகலமுள்ள பாதைப் பாவிப்புரித்து பிறநீங்கலாக இதடங்கலும் இது இரண்டாம் ஈடாகக் கட்டுப்படுத்தப்பட்டது.

3. மேற்படி சங்கானைக் கோவிற்பற்று தொல்புரம் இறை சம்மாட்டிப்புலம் பரப்பு நெல் இலாச்சம் பத்தும் கிணறும் எல்லை கிழக்கும் அம்பலவாணர் பெண் பொன்னம்மாவுக்குமுரிய ஆதனம். வடக்கு வேலாயுதர் முருகேசுவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு தம்பிப்பிள்ளை பெண் பகவதிக்குமுரிய ஆதனம். தெற்கு ஆறுமுகம் கந்தையாவுக்குரிய ஆதனம் இதடங்கலும்.

4. மேற்படி சங்கானைக் கோவிற்பற்று தொல்புரம் இறை இநல்லியான் பரப்பு நெல் இலாச்சம் ஆறு (ப நெ இ 6) வடகெல்லைக் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும் எல்லை கிழக்கு அம்பலவாணர் நாராணபிள்ளைக்குரிய ஆதனம் வடக்கு வபிரமுத்து சுப்பையாவுக்குரிய ஆதனம். மேற்கு சண்முகம் பெண் மாணிக்கத்திற்குரிய ஆதனம். தெற்கு பண்டாரம் கந்தையாவுக்குரிய ஆதனம் இதடங்கலும்.

5. மேற்படி சங்கானைக் கோவிற்பற்று தொல்புரம் இறை நெல்லியான் பரப்பு நெல் இலாச்சம் பத்து (ப நெ இ 10) தெற்கெல்லைக் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும் எல்லை கிழக்கு அம்பலவாணர் நாராணபிள்ளைக்குரிய ஆதனம். வடக்கு ஒழுங்கை, மேற்கு பேரம்பலம் கணபதியாருக்குரிய ஆதனம், தெற்கு இரண்டாம் எதிராளிக்குரிய ஆதனம் இதடங்கலும்.

சி. சோ. நரசிங்கம் ஜே. பீ
நீதிமன்ற விற்பனையாளரும்
மதிப்பாளரும்

தொல்புரம்
18-10-77. 7736

## 1973 ம் ஆண்டின் 44 ம் இலக்க நீதிநிருவாகச் சட்டத்தின் 283 ம் பிரிவின் கீழ் மரண சொத்து நிருவாகத் தத்துவப் பத்திரம் வழங்குவதற்கான இடைக்காலக் கட்டளை

இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

காரைநகரைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை சுப்பிரமணியம் என்பவரின் மரணசாதனம் எழுதப்படாத ஆதனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விடயத்தில்

காரைநகர் நடுத்தெருவைச் சேர்ந்த சுப்பிரமணியம் இராசரத்தினம்.

விண்ணப்பகாரர்

வலயம்: யாழ்ப்பாணம்
இல: 395/

மற்றும்

காரைநகர் சுப்பிரமணியம் சண்முகரத்தினம்.

பிரதிவாதி

281 ம் பிரிவின்கீழ் தாக்கல் செய்யப்பட்டதும் 17-8-1977 திகதியிடப்பட்டதுமான விண்ணப்பத்தில் இருக்கும் கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதென திருப்தியடைந்ததின் பேரில் 1977 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28 ந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னதாக எவராவுதல் எதிர்க்காரணம் காட்டினாலன்றி மேற் சொல்லப்பட்ட விண்ணப்பகாரர் காலஞ் சென்றவரின் மகன் என்றவகையில் காலஞ்சென்றவரின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்குரிய உரிமைத் தத்துவப் பத்திரங்களைப் பெறுவதற்கு உரிமையுடையவரெனவும், அவ்வண்ணமே அவருக்கு வழங்கப்படுமென்றும் யாழ்ப்பாண நீதி நிர்வாக வலயத்தின் தத்துவப் பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் செயல்பட்டு இத்தால் கட்டளையிடுகிறேன்.

1977 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28 ந் திகதி.

ஒப்பம்

கா. கணபதிப்பிள்ளை
தத்துவப் பத்திர அதிகாரி
யாழ்ப்பாணம்.

மேல் நீதிமன்றம்
யாழ்ப்பாணம். 7737

## மயிலிட்டிக் கிராமசபையின் வேலைகள் கேள்விவிளம்பரம்

கீழ்க்காணும் வேலைக்கான சீல்வைத்த கேள்விகள் மயிலிட்டிக் கிராமசபை விசேட ஆணையாளரால் மார்கழி மாதம் 16ம் திகதி காலை 10-30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1. வல்லிபுரம் வீதிவேலை
2. கேள்விகள் கிராமசபைக் கேள்விப் பெட்டியிலோ அன்றிப் பதிவுத் தபாலிலோ அனுப்பப்படவேண்டும். பிரதி பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்கட்கு அனுப்பப்படவேண்டும்.
3. ரெண்டர் பிணையாக ரூபா 50/-ம், பத்திரப் பணம் ரூபா 10/-ம் 14-12-77 பி. ப 3-00 மணி வரை கட்டியதன் பேரில் காரியாலயத்தால் கேள்விப்பத்திரம் வழங்கப்படும்.
4. வேலைகள் ஏற்கப்பட்டதென அறிவிக்கப்பட்ட 3 மாதங்களுக்குள் வேலை பூர்த்தியாக்கப்பட்டு கையளித்தல் மிகமுக்கியமானதாகும்.
5. மேலதிக விபரங்கள் கந்தோரிலும் விளம்பர அறிவித்தல்களிலும் அறிந்துகொள்ளலாம்.

பி. எம். யோசேப்
விசேட ஆணையாளர்,
மயிலிட்டிக் கிராமசபை.

சி. நா. இராஜா,
பிரதம இலிகிதர்,
விசேட ஆணையாளர்
அலுவலகம்,
மயிலிட்டிக் கிராமசபை,
காங்கேசன்துறை.
18-11-77. 7734

## அறிவித்தல்

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை இல 270 வசிக்கும் பெ பரமசிவம் ஆகிய நான் 1967ம் ஆண்டு தொடக்கம் நஷனல் டீசல் என்ஜினியர்ஸ் ஸ்தாபனத்தில் நான் ஆற்றிவந்த கடமையில் இருந்து 30-11-1977ல் விலகிக்கொள்கிறேன் · என் பதை நஷனல் டீசல் என்ஜினியர்ஸ் உரிமையாளருக்கும் நஷனல் டீசல் என்ஜினியர்ஸ் அபிமானிகளுக்கும் ஆதரவாளர்களுக்கும் தயவாக தெரியப்படுத்துகிறேன்.

இப்படிக்கு —
நஷனல் டீசல் என்ஜினியர்ஸ்
ஸ்தாபனத்தில்
கடமையாற்றிவரும்
பெ. பரமசிவம்.

7735

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. ஈடு/ 285

தீ. அ. இராசையாபிள்ளை கைம்பெண் எலிசபெத் முத்தம்மா, கரம்பன், ஊர்காவத்றுறை.

வழக்காளி

எதிராக

சின்னத்துரை செல்லப்பாவும், பெண் விசாலாட்சியும் இருவரும் புளியங்கூடல் ஊர்காவற்றுறை.

யாழ்ப்பாணம் மாவட்டக்கோட்டின் ஈடு/285-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1977ம் வருடம் மார்கழி மாதம் 8-ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10-00மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபாய் 6000 ம் தீர்வைத் திகதியாகிய 1977-ம் ஆண்டு பங்குனி மாதம் 31-ந் திகதி தொடக்கம் ரூபா 6600-க்கு இறுக்கும்வரை 9 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 548 சதம் 60.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று சரவணையிறை "குமிழந்தலைக் கலட்டியும் குமிழந்தனை தொட்டக்கலட்டியும் குமிழந்தனைத் தாழ்வும் குமிழந்தனை கீரைக்காறி வயலும் குமிழந்தனை" நெ. பர. 8 குழி 3 3/4. (நெ பர. எட்டு, குழி மூன்றேமுக்கால்) எல்லை கிழக்கு சரவணமுத்து பெண் புனிதவதிக்கும் பாலகணபதி பெண் சிவமங்களத்துக்குமுரியவாதனம், வடக்கு பாலசுப்பிரமணியம் பெண் நாகம்மாவுக்கும் ஐயாத்துரை பெண் சிவயோகத்துக்கும் பரநிருபசிங்கம் பாலசுப்பிரமணியத்துக்குமுரியவாதனங்கள். மேற்கு பாலசுப்பிரமணியம் பெண் நாகம்மாவினுதனம், தெற்கு பொன்னுச்சாமி பெண் இராஜேஸ்வரியினுதனம் இதடங்கலும்.

எஸ். சங்கரப்பிள்ளை J. P.
கொமிஷனர் & விலைமதிப்பாளர்.

''வேல்பதி''
புத்தூர். 23-9-77. 7738

## வரி விளம்பரம்

### தேவை

நெசவு நெய்தலில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. இருப்பிட வசதியுண்டு விபரங்களுக்கு: ந. கந்தசாமி, சிவாகைத்தறிநிலையம், மண்டதினி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு. 7729

### சேவை

பனம் விதைகளை நட்டுப் பனையைவிருத்திசெய்ய விரும்புபவர்களுக்கு வவுனியா, ஓமந்தை, புளியங்குளம் ஆகிய பல்வேறிடங்களில் 23-11-77 புதன்கிழமை பனம்விதை விநியோகம் செய்கிறோம். தேவையானோர் முன்னரே தொடர்புகொள்ளவும். மில்க்வைற், த. பெ. இல. 77, யாழ்ப்பாணம. 7728

மன்னாரிலுள்ள மொத்த விற்பனை நிலையத்திற்கு முகாமையாளரும், ஸ்ரோர்கீப்பரும் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பரதாரர்; த. பெ. இல. 82, யாழ்ப்பாணம். 7733

ஆங்கில சுருக்கெழுத்து தட்டச்சு தெரிந்த பெண் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். விளம்பரதாரர் த. பெ. இல. 82, யாழ்ப்பாணம். 7732

13 வயதுக்கு மேற்பட்ட வேலை பழகுநர்கள் (ஆண்கள்) கண்ணாடித் தொழிற்சாலைக்கு உடனடியாகத் தேவை. வேலை பழகும்பொழுதும் வேதனம் கொடுக்கப்படும் நேரில் வரவும். 25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7742

## "தென்றல்" சஞ்சிகை வெளியீடு

[யாழ்ப்பாணம்]

'தென்றல்' என்றொரு இலக்கிய சஞ்சிகை யாழ். நகரில் வெளிவரவிருக்கிறது. கதை, கட்டுரை, கவிதை முதலியவற்றுடன் பல சிறப்பம்சங்களைக் கொண்டு இது வெளிவரும். 'சென்ட்ரல் லைற்ஸ் கிளப்' வெளியிடும் 'தென்றல்' முதலாவது இதழ் வெளியீட்டு விழா யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் திரு. இ மகாதேவா [தேவன்] தலைமையில் இடம் பெறவுள்ளது. யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல் காதர் தலைமையில் நிகழும் இவ்விழாவில் கலாநிதி அ. சண்முகதாஸ், திரு. என் ரி. ஜெகன் ஆகியோர் உரையாற்றுவர். [அ]

## "இலக்கிய உலகின் இழப்பு"

(அரியாலை)

"ஈழத்து இலக்கிய உலகில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி இலக்கிய வளர்ச்சிக்காக சொத்துச்சுகம் அனைத்தையும் அர்ப்பணித்த இரசிகமணியின் மறைவு இலக்கிய உலகிற்குப் பெருநஷ்டம் மாகும். சிறுகதை, கட்டுரை விமர்சனம் ஆகிய துறைகளில் அவர் ஆற்றிய பணி இலக்கியத்தைச் செழுமைப் படுத்தியது. அன்னாரின் மறைவு ஈழத்து இலக்கியத்துறைக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்''.

இவ்வாறு இரசிகமணி கனக செந்திநாதனின் மறைவை யொட்டி யாழ்ப்பாண மாநகர சன சமூக நிலையச் செயலாளர் விடுத்த அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுளார். (அ)

# இஸ்ரேலை ஒரு நாடாக எகிப்து அங்கீகரிக்கிறது

## ஆட்சிமன்றத்தில் சதாத் அறிவிப்பு

ஜெருஸலம், நவ. 21

**இஸ்ரேலை ஒரு நாடாக எகிப்து அங்கீகரிக்கிறது என்று எகிப்திய அதிபர் ஜனுப் அன்வர் சதாத் இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் தெரிவித்தபோது இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் உட்பட அங்கு கூடியிருந்தவர்கள் மகிழ்ச்சியுடன் கரகோஷம் செய்தனர்.**

**மத்திய கிழக்குப் பிரச்னைக்கு சமரசத் தீர்வு காணவே தாம் விரும்புவதாகவும் அமைதிப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காகத் தாம் எகிப்துக்குப் போகத் தயாராக உள்ளதாகவும் இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின், ஜனுப் சதாத்தின் உரைக்குப் பதிலளித்துப் பேசுகையில் அங்கு கூறினார்.**

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த உரையை ஜனுப் சதாத் இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் 55 நிமிட நேரமாக நிகழ்த்தியபோது திரு. பெகின் உட்பட அங்கு கூடியிருந்தவர்கள் எல்லோரும் மௌனமாக இருந்து உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

ஆக்கிரமிக்கப்பட்ட அரபு மண்ணிலிருந்து இஸ்ரேல் வெளியேறும் பட்சத்திலேயே மத்திய கிழக்கில் சமாதானமும் சகவாழ்வும் சாத்தியம் என்றும் ஜனுப் சதாத் வலியுறுத்தினார்.

ஆக்கிரமிக்கப்பட்ட அரபு மண்ணிலிருந்து இஸ்ரேல் வெளியேறவேண்டும்; பாலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமையையும் சுதந்திரத்தையும் இஸ்ரேல் அங்கீகரிக்கவேண்டும் மத்திய கிழக்கு விவகாரம் குறித்து ஐ. நா. சாஸனத்தைக் கடைப்பிடிக்கவேண்டும். ஆகிய உட்பட 5 நிபந்தனைகளை தமது உரையில் ஜனுப் சதாத் தெரிவித்தார்.

### சமாதானத்தின் தூதுவர் மகாத்மா

''சமாதானத்தின் தூதுவரான மகாத்மா காந்தியின் அஹிம்சைக் கொள்கைகளையே தாம் கடைப்பிடித்து வருவதாகவும் அவரின் கொள்கைக்கிணங்க இஸ்ரேல் வன்முறைகளை கைவிட வேண்டும் என்றும் ஜனுப் சதாத் கேட்டுக்கொண்டார்.

### நீண்டநேரம் கர ஒலி

ஜனுப் சதாத்தின் உரையை மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரதமரும் மற்றவர்களும் நீண்டநேரமாகக் கரகோஷம்செய்தனர். உரையின் முடிவில் பிரதமர் திரு. பெகின் ஜனுப் சதாத்தை கைலாகு கொடுத்து மகிழ்ச்சி பொங்க வரவேற்றார்.

### பிரதமர் பெகின் பதிலுரை

திரு. பெகின் தமது பதிலுரையில் மத்திய கிழக்குப் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்கு பேச்சுவார்த்தைகள் நடத்த இஸ்ரேல் தயாராக இருக்கிறது என்றும் அரபு நாடுகள் உட்பட சகல உலக நாடுகளுடனும் ராஜதந்திர உறவுகளை வைத்திருக்கவே இஸ்ரேல் விரும்புகிறது என்றும் கூறினார். (இ)

## சதாத்துக்கு பேரக்குழந்தை

கெய்ரோ, நவ. 21

எகிப்திய அதிபர் ஜனுப் சதாத் இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் உரையாற்றிக்கொண்டிருந்தபோது கெய்ரோவில் உள்ள ஆஸ்பத்திரியில் அவருக்கு பேரக் குழந்தை ஒன்று பிறந்துள்ளது. [இ]

## 320 மைல் பேரணி

சென்னை, நவ. 21

திராவிட முன்னேற்றக்கழகத்தலைவர் கலைஞர் கருணாநிதியையும் தி.மு.க. தொண்டர்களையும் விடுதலை செய்யக் கோரி குளித்தலைநகர தி.மு.க. கழகத்தொண்டர்கள் 320 மைல் நடந்து ஊர்வலமாக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதுவரை இந்தியாவில் நடைபெற்ற ஊர்வலங்களில் மிகப்பிரமாண்டமான ஊர்வலம் என வர்ணிக்கப்படும் இந்த அணிக்கு பெரியார் வித்தா தலைமை தாங்கினார். ஊர்வலத்தின் இறுதியில் அண்ணா சிலைக்கு மரியாதை செலுத்தி விட்டு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரியிடம் மகஜர் ஒன்றை கையளித்தனர். (செ-இ)

# இலங்கை-இந்திய அதிகாரிகள்மாநாடு

(கொழும்பு)

சட்டவிரோத குடியேற்றம், சட்டவிரோதக் கடத்தல் ஆகியவற்றை தடுக்கும் வழிமுறைகள் பற்றி இலங்கை, இந்திய அதிகாரிகள் இன்று ஆராய்வார்கள்.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் இன்று ஆரம்பமாகும் மாநாட்டில், இரு நாடுகளையும் சேர்ந்த பொலிஸ், சுங்கப்பகுதி, குடிவரவு-குடியகல்வு அதிகாரிகள் கலந்து கொண்டு பல விஷயங்கள் குறித்தும் விரிவாக ஆராய்வார்கள்.

கடலில் தத்தளித்து கரை ஒதுங்கும் மீனவர்களை அவர்களது தாயகத்துக்கு அனுப்புவது, கச்சதீவு உற்சவம் பாதுகாப்பு ஏற்பாடுகள் அனுமதிப் பத்திரமில்லாமல் இந்தியா வரும் இலங்கையர் ஆகிய விஷயங்கள் குறித்து இம்மாநாட்டில் ஆராயப்படும்.

"அரசு—மக்கள் நல்லுறவுக்கு

## சமூகத்தலைவர்கள் பாலமாக விளங்க வேண்டும்"

(மாவிட்டபுரம்)

''நாட்டின் நன்மை கருதி அரசாங்கம் எடுக்கும் பல்வேறு திட்டங்களைப் பற்றியும், அவற்றால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் பொதுமக்கள் நன்கு அறிவதற்குச் சந்தர்ப்பங்கள் ஏற்படாதிருப்பதால் இத்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிவைக்கப் பொதுமக்களது ஒத்துழைப்பைப் பெற முடியாமல் இருக்கிறது. ஆகவே அரசுக்கும் பொதுமக்களுக்குமிடையில் ஒரு நல்லுறவுப் பாலமாகச் சமூகத் தலைவர்கள் விளங்கி அரசின் திட்டங்கள் வெற்றிபெற உதவவேண்டும்,''

இவ்வாறு யாழ்ப்பாணக் கச்சேரி ஆலோசனைச் சபா மண்டபத்தில் இடம்பெற்ற சமூகத் தலைவர்களுக்கான குடும்பத் திட்டக் கருத்தரங்கை ஆரம்பித்துவைத்துப் பேசிய யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. லால் விஜயபாலா கூறினார்.

இலங்கைக் குடும்பத் திட்டச் சங்க யாழ். மாவட்டக் கிளையின் ஆதரவில் யாழ் பொதுசனத் தொடர்பதிகாரி திரு. பி. எல். பற்றிக் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் அரசாங்க அதிபர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''இன்று நாட்டில் அதிகரித்துவரும் சனத்தொகைப்

(5ம் பக்கம் பார்க்க)

# சதாத் துரோகியாம்

## பலஸ்தீனஇயக்கம் கண்டனம்

பெய்ரூட், நவ. 21

''சதாத் ஒரு துரோகி என்று பலஸ்தீன இயக்கம் தெரிவித்துள்ளது.

சதாத்தின் இஸ்ரேல் விஜயத்தைக் கண்டிக்குமுகமாகவே பலஸ்தீன விடுதலை இயக்கம் இக்கருத்தை வெளியிட்டுள்ளது.

ஜனுப் சதாத்தின் இஸ்ரேல் விஜயம்பற்றி ஆராய அரபு நாடுகளின் மகாநாட்டை உடன் கூட்டவேண்டும் என்றும் பாலஸ்தீன விடுதலை இயக்கம் அரபு நாடுகளைக் கேட்டுள்ளது.

# ஆந்திராவில் சூறுவளிக்கு ஆயிரக்கணக்கில் பலி!

## குண்டூரில் மட்டும் 628 பேர் மரணம்

ஹைதராபாத், நவ. 21

ஆந்திரப்பிரதேசத்தில் கடந்த சனியன்று வீசிய சூறுவளியினால் ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர் என அஞ்சப்படுகிறது.

900 பேர் பலியான தகவல் மாநில அரசுக்கு எட்டியுள்ளதாகவும் தகவல் தொடர்பு சாதனங்கள் துண்டிக்கப்பட்டதினால் புயல்சேதம் பற்றிய தகவல்களைச் சேகரிக்க முடியாத நிலையில் உள்ளதாகவும் ஆந்திர மாநில அரசு அறிவித்தது.

குண்டூர் மாவட்டமே சூறுவளியினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் இம்மாவட்டத்தில் மட்டும் 628 பேர் பலியாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### அனுதாபச் செய்திகள்

சூறுவளியின் கொடுமையினால் பலியானவர்களுக்காக ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவ ரெட்டி, உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங், காங்கிரஸ்தலைவர் திரு. பிரம்மானந்த ரெட்டி ஆகியோர் அனுதாபச் செய்திகளை அனுப்பியுள்ளனர். (இ)

வவனியாவில்

## 140 தொலைபேசிகள் இயங்குவதில்லை!

### மந்திரிக்கு எம். பி. புகார்

[வவுனியா]

வவனியாவில் தொலைபேசிகள் சரியானமுறையில் இயங்கவில்லையென வவனியா எம். பீ. திரு. சிவசிதம்பரம் தபால் அமைச்சருக்குப் புகார் செய்துள்ளார்.

அவர் தமது புகாரில் வவனியாவுக்கும் முல்லைத்தீவுக்கும் இடையில் தொலைபேசித் தொடர்பு மாதத்தில் மூன்று நாட்கூட சரியான முறையில் இயங்கவில்லையென்று தெரிவித்துள்ளார்.

வவனியாவில் மழை ஆரம்பமானதும் வவனியா நகரில் உள்ள 140 உள்ளூர் தொலைபேசிகள் கூட இயங்குவதில்லையென்றும் இதனால் வருடத்தில் செலுத்தப்படும் பணமான 250 ரூபாவுக்குக்கூட பயனடைய முடியாமல் இருக்கிறதென்றும் புகாரில் தெரிவித்துள்ளார். இதுபற்றி முறையிடுகையில் அதிகாரிகள் நிலத்தின் கீழ் உள்ள கேபிளிலேயே பிழையிருக்கிறதென்று கூறுகிறார்கள் என்றும் ஆகையால் இவைகளுக்கான நிரந்தர திருத்தவேலைகளை மேற்கொள்ளுமாறும், வவனியாவுக்குப் புதிய ''சுவிட்ச் போட்'' ஒன்றை வழங்குமாறும் தெரிவித்துள்ளார். [க]

## பிரிட்டிஷ் உதவி

லண்டன், நவ. 21

கால்நடைகளுக்கு ஏற்படும் குளம்பு-வாய் நோய்களைத் தடுக்கும் மருந்து இலங்கையில் தயாரிக்கப்படவிருக்கிறது.

இம்மருந்தைத் தயாரிப்பதற்கான ஆய்வு கூடத்துக்கு வேண்டிய உபகரணங்களை பிரிட்டன் நன்கொடை உதவியாக வழங்கவிருக்கிறது.

இதற்கென பிரிட்டனின் வெளிநாட்டு அபிவிருத்திஅமைச்சு 360,000 பவுணை வழங்கும். இத்தொகையைக்கொண்டு பிரிட்டனிலிருந்து ஆய்வுகூட உபகரணங்களும், நோய் ஆராய்ச்சிக்கும், மருந்து விநியோகத்துக்கும் தேவையான வாகனங்களும் தருவிக்கப்படும்.

## 103 பேரைக் காணவில்லை

சென்னை, நவ. 21

தமிழ்நாட்டில் அண்மையில் வீசிய புயல், பெருமழையை அடுத்து 103 பேர் காணாமல் போய்விட்டனர் என அறிவிக்கப்பட்டது.

புயலுக்குப் பலியானவர்களின் தொகை 407 ஆக அதிகரித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. (இ)

## பேரவையில் சிந்தியவை

யோகேஸ்: திரு அனுரா பண்டாரநாயக்கா முன்னர் அடிக்கடி யாழ்ப்பாணம் வந்து போனுர். 9 பேரைப் பலிகொண்ட தமிழாராய்ச்சி மாநாட்டுச் சம்பவம் பற்றி விசாரிக்கக் கமிஷன் வைக்க வேண்டுமென்று திரு. அனுரா கூடக் கூறினுர்.

காமினி திசநாயக்கா: ஏன் அடிக்கடி யாழ்ப்பாணம் வந்தார்?

யோகேஸ்: ஓய்வுக்கும் உல்லாசத்திற்கும்.

காமினி: யாருடன் வந்து யாருடன் தங்கினுர். (சிரிப்பு)

யோகேஸ்: முன்னர் நீலச் சட்டை போட்டவர்கள் எல்லாம் இப்போது பச்சைச் சட்டை போடுகிருர்கள். சிலர் பழைய நீலச்சட்டைக்கே பச்சைச் சாயம் போட்டிருக்கிருர்கள்.

குண்டசாலை சந்திரபால: கண்டி மன்னன் கடைசியாகக் குண்டசாலையிலேயே ஆட்சி நடத்தினுர். யாழ்ப்பாணத்தில் அல்ல.

சந்திரபால: தமிழ் ஈழம் கோருபவர்கள் சேர் பொன். அருணுசலம், இராமநாதன் போன்ற தலைவர்களை உருவாக்க முயற்சிக்கவேண்டும்.

சந்திரபால: அங்கும் இங்கும் வாழும் சிறுபான்மையினரே தமிழ்மக்கள்.

சந்திரபால: மாற்று அரசை அமைக்கமுடியாத முதலாது எதிர்க்கட்சித் தலைவரை நாம் பெற்றுள்ளோம்.

சந்திரபால: இயற்கை எல்லையற்ற தமிழ் ஈழத்திற்கு எந்தவொரு வெளி நாடும் கடன் கொடுக்க மாட்டாது.

ஒரு குரல். அவர்களே பணத்தை அச்சிடுவார்கள்.

சந்திரபால: அப்படியானுல் அவர்கள் சிறை செல்ல நேரிடும்.

கதிரவேலுப்பிள்ளை: அரசு வழங்கும் 50 ரூபா மான்யத்தினுல் நாட்டின் ஒரு பகுதியினரின் புரட்சியைத் தடுக்கமுடியாது.

காரியவாசம் (அகலவத்தை): கடந்த அரசின் காலத்தில் பல 'கியூ'க்களைக் காணமுடிந்தது. யு. என். பீ. ஆட்சியில் 50 ரூபா மான்யத்தைப் பெறுவதற்கு மட்டுமே நீண்ட 'கியூ'வைக் காண முடியும்.

காரியவாசம்: பெற்ருேரிடம் பணம் வாங்க வேண்டியிருப்பதாலேயே இதுவரை இளைஞர்கள் தாடியும், தலையும் வளர்த்தனர். இனிமேல் 50 ரூபாவில் அவற்றை வெட்டிவிடுவார்கள்.

காரியவாசம்: 83ம் ஆண்டு நாம் மக்கள் முன் போகும்போது ஒரு அமெரிக்க டாலரின் பெறுமதி 6 ரூபாவாக இருக்கும்.

பிரதிக் கலாச்சார அமைச்சர்: காங்கேசன் துறைமுகத்தை அபிவிருத்திசெய்தால் இந்நாட்டில் தற்போது பெரும்பான்மை இனமாக இருக்கும் சிங்கள மக்கள் சிறுபான்மை இனமாகிவிடுவர்.

பிரதிக் கலாச்சார அமைச்சர்: வடபகுதிவிவசாயிகள் தாம் உற்பத்தி செய்யும் மிளகாய், வெங்காயம் ஆகியவற்றைப் பதுக்கிவைத்திருந்து புறக்கோட்டைச் சந்தைக்குக் கொண்டுவந்து கொள்ளை லாபம் அடிக்கின்றனர்.

(ம-இ)

## இன்று அமரர் திருச்செல்வத்தின் முதலாண்டுசிரார்த்தம்

# 'தமிழர் விடுதலை இயக்கம்' உருவாக்க விரும்பிய 'திரு'

**(தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் கமிட்டி உறுப்பினராக இருந்து தமிழ் பேசும் மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றிய முன்னுள் உள்ளூராட்சி அமைச்சர் அமரர் எம். திருச்செல்வத்தின் முதலாவது சிரார்த்த தினம் இன்று அமைதியான முறையில் கொண்டாடப் படுகிறது. அமரர் திருச்செல்வத்தின் அந்தரங்கச் செயலாளராக கடமையாற்றிய சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் நீங்காத நினைவுகளை இங்கு தருகிருர்.)**

தமிழர் விடுதலைக் கூட்டணியை உலக இயக்கமாக 'தமிழர் விடுதலை இயக்கம்' என்ற பெயரில் இயங்க வேண்டும் என்றும் அதன் கிளைகள் உலகெங்கும் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றும் தமிழ்மக்களில் அக்கறை கொண்டுள்ள தமிழரல்லாதவர்களையும்உறுப்பினராகக் கொண்டு இயங்க வேண்டுமென்றும்முடிவுசெய்து அதற்கான திட்டங்களை தயாரிக்கும் வேளையில் அமரர் திருச்செல்வம் நம்மைவிட்டுப்பிரிந்து விட்டார்.

ஒவ்வொரு தொழிலில் உள்ளவர்களையும் உட்படுத்திய ஒரு இயக்கமாக இயங்கினுலேயே விடுதலை பெறலாம் என அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார் அமரர் திருச்செல்வம்.

### முதல் சந்திப்பு

அமரர் திருச்செல்வத்தை முதன்முதலில் நான் சந்தித்தது 1962ம் ஆண்டில். அப்பொழுது நான் அரசாங்க எழுதுவினைஞர் சங்கப்பொதுச் செயலாளராக இருந்தேன். தந்தை செல்வாவுடன்தான் அவரை முதலில் சந்தித்தேன்.

அப்போது சிங்களத் தேர்ச்சி பெருதவர்கள் 55 வயதிற்கு மேல், சேவை நீடிப்பு, பதவி உயர்வு பெறமாட்டாதவர்கள் என 555, 560 சுற்றுநிருபங்கள் அறிவித்தன. இது தமிழ் அரசாங்க ஊழியர்களைப் பாதிக்கக் கூடியதாக இருந்தது. இச்சுற்றறிக்கைகளை அன்றைய அரசு வெளியிட்டது. இதுதொடர்பாகச் சட்ட ஆலோசனைகளைப் பெறுவதற்காகவே அமரர் திருச்செல்வத்திடம் சென்றிருந்தேன்.

சிங்களம்மட்டும் சட்டத்தை சட்டரீதியாகஎதிர்த்துவெற்றி காண முடியாது என அந்நேரம் பலர் அபிப்பிராயப்பட்டனர். இதனுல் எவரும் நீதிமன்றத்திற்குச் செல்ல முன்வரவில்லை.

இச்சூழ்நிலையில் 1961ம ஆண்டு 560ம் இலக்க சுற்றுநிருபத்தைச் செல்லுபடியாகாதென வாதிட ஒரேஒரு வழி சிங்களம் மட்டும் சட்டத்தை செல்லுபடியாகாதென்று வாதாடுவதுதான் என அமரர் திருச்செல்வம் ஆலோசனை கூறினுர்.

சுற்றுநிருபத்தை சட்டரீதியில் தொடர்புபடுத்தி வெற்றி பெறுவது அசாத்தியமானது அவரின் கனிஷ்ட வழக்கறிஞர்கள் அபிப்பிராயப்பட்டனர்,

### திருவிடம் முழுப்பொறுப்பும்

இந்நேரத்தில் அரசாங்க எழுதுவினைஞர்சங்கம் இப்பிரச்னையை சட்டரீதியில் வாதாட முழுப்பொறுப்பையும் அவரிடம் ஒப்படைத்தது.

இதன்பயனுக அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் பெயரில் ஒருவழக்கும் சங்க உறுப்பினர் திரு. கெ.கோடீஸ்வரன் பெயரில் மற்றொரு வழக்கும் ஊதியஉயர்வுபற்றியும் சேவை நீடிப்புபற்றியும் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு சம்பந்தமாக இந்திய பிரபல வழக்கறிஞர்களான எம். கே. நம்பியார், திரு. மோகன் குமாரமங்கலம், அட்வகேட் ஜெனரல் வெங்கடாச்சாரியா ஆகியோரிடம் கலந்து ஆலோசிப்பதற்காக திரு. சர்வானந்தாவுடன் இந்தியா சென்றிருந்தேன்.

வழக்கறிஞர் எம். கே. நம்பியாரின் கருத்துப்படி அமரர் திருச்செல்வத்தின் கருத்தும் ஒருமைப்பாடுடையதாக இருந்தது.



கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது முதல் 15 நிமிடங்கள் இந்த வழக்கு உடனடியாகத் தள்ளுபடி செய்யப்படுமோவென தந்தை செல்வநாயகம் பயந்திருந்தார் எனப் பின்னர் தெரிவித்தார்.

இப்படியான சூழ்நிலையில் மிகத் தந்திரமாக நடத்தி இருதினங்களாக நிரூபிக்கக்கூடிய விதத்தில் சாட்சிகளைப் புகுத்தி தமது சட்டத்திறமையை காட்டியுள்ளார் அமரர் திரு.

### இப்படி நடந்திராது

அமரர் திருச்செல்வம் பிறந்திராவிட்டால் இப்படியான ஒரு மொழிபற்றிய வழக்கு நடந்திருக்கவே முடியாது.

இவ்வழக்குத் தீர்ப்பு இப்பொழுது பல நாட்டு நீதிமன்றங்களில் எடுத்துரைக்கப்படும்போது அமரர் திருச்செல்வத்தின் சாதனையை எடுத்துக் காட்டுகிறது.

**ஆர். பாலசுப்பிரமணியம்**
**— சட்டத்தரணி**

1964ல் சிங்கள தேர்ச்சி பெருத ஊழியர் 6 பேருக்கு கட்டாய இளைப்பாற்று அறிவித்தல் வழங்கப்பட்டது.

அந்த நேரத்தில் அவர் சுகவீனமுற்றிருந்தாலும் கூட அதனைப் பொருட்படுத்தாது அக்கட்டளைகளை தடுத்துநிறுத்த வேண்டிய வேலைகளைச் செய்வதற்கு அவர் பின்நிற்கவில்லை.

### வாபஸ் பெறச் செய்தார்

அவர் தமது வாக்குச்சாதுரியத்தினுல் அன்றைய பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின்மூலம் இக்கட்டளைகளை சில நிமிட பேச்சு வார்த்தையில் வாபஸ்பெறும்படி செய்திருந்தார்.

இக்கட்டளைகள் எழுத்துமூலமாக உறுப்பினர்களுக்குக் கிடைக்கும்வரை இப்படியான ஒரு வேலையை அவர் செய்திருப்பாரென அரசாங்க எழுதுவினைஞர்சங்க உறுப்பினரே நம்ப முடியாத நிலையிலிருந்தனர்.

நீதிமன்றத்தில் மட்டுமல்ல அரசியல் தலைவர்களுடன் பேசி தமது கோரிக்கைகளை நிலைநாட்டும் ராஜதந்திர ஆற்றலையும் அவர் பெற்றிருந்தார்.

இந்த நாட்களில்தான் அவர் தமிழரசுக்கட்சிச் சார்பில் உள்ளூராட்சி அமைச்சராகக் கடமையாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அவர்வேலைத் திறமைக்கு இடம்கொடுத்தாரேயொழிய உற்ருர் உறவினருக்காகவும் சிநேகிதருக்காகவும் தனிப்பட்ட சலுகைகள் செய்யவில்லை.

தமது அந்தரங்க செயலாளரைத் தெரிவு செய்யும்போது கூட தானுக முடிவு செய்தாரேயொழிய மற்றவர்களின் நெருக்குதலுக்கு இடம்வைக்கவில்லை அவர் அமைச்சராகக் கடமையாற்றிய காலத்தில் இலைமறைகாய்போல செய்த சேவைகள் உள்ளூராட்சிமன்றத்தலைவர்களுக்கும் அரசியல் எதிரிகளுக்கும்தான் தெரியும்.

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அவர் மேலதிகமாகச் செய்த ஆக்கவேலைகளைப்பற்றி டாக்டர் என். எம். பெரேரா சுட்டிக்காட்டி அவரைத் தாக்கிப்பேசியதே அவர் தமிழ்மக்களுக்குச் செய்த சேவைகளுக்கு ஒரு எடுத்துக்காட்டு.

### தந்திரமாக விதிகளை நுழைத்தார்

தனித்து மந்திரிசபையில் பல எதிர்ப்புக்கிடையில் பேசாமலிருக்க வேண்டியபோதிலும் தமிழ்மொழி விசேட சட்ட விதிகளை தயாரிக்கும்போது மிகத் தந்திரமாக சமஅந்தஸ்து நிலையேற்படக்கூடிய அளவிற்கு பலவிதிகளை நுட்பமாக புகுத்தியுள்ளதை அவரது அரசியல் எதிரிகளே சுட்டிக்காட்டியுள்ளனர்.

துரதிருஷ்டவசமாக அவர் தயாரித்த 'மாவட்ட சபை மசோதா' நிறைவேற்றப்படுமுன் கோணேஸ்வர ஆலயப் பிரச்னையில் அவர் கட்சியின் முடிவை ஏற்று மந்திரி சபையிலிருந்து விலகியது, பிரதேச சுயாட்சி முறையை பல ஆண்டுகளுக்குப் பின்போட்டுள்ளது.

### டட்லியுடன் நேரடி மோதல்

அவர் அமைச்சராக இருந்தபோது ஒரு சந்தர்ப்பத்தில் பிரதமர் டட்லிசேனநாயக்காவிற்கும் அவருக்கும் நேரடி மோதல் ஏற்பட்டது. அமரர் டட்லி சேனநாயக்கா, 'நீர் என்னுலேயே நியமிக்கப்பட்ட உறுப்பினரும் மந்திரியும் என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும் என்று கூறியபோது அவர், 'நான் திரு செல்வநாயகத்தினுலேயே நியமிக்கப்பட்டேனேயொழிய வேறு எவராலும் நியமிக்கப்படவில்லை என அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூறினுர்.

தனித்திருந்து பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கு மந்திரி சபையில் பல தடங்கல் ஏற்பட்டபோது பல தடவை ராஜினுமா செய்ய முற்பட்டார். ஆனுலும் தருமரின் கட்டளைப்படி பீமன் கட்டுப்பட்டது போல தந்தை செல்வா 'எதற்கும் பொறுமையாக இருந்து கடமையாற்றும்படி தூண்டிய தன்பேரில் அவர் மூன்றரை வருடம் மந்திரியாகவிருந்தார். என்பது பலருக்குத் தெரியாமலிருக்கலாம்,

தமிழ்பேசும் தலைவர்கள் எல்லோரையும் ஒன்றுபடுத்த வேண்டுமென்றும் பாடுபட்டுழைத்தார். அவர் எந்தத் தமிழ்த் தலைவரிலும் வெறுப்பு வைத்திருக்கவில்லை.

மந்திரிசபையில் அவர் இருந்தபோதுகூட அமரர் ஜி ஜி பொன்னம்பலத்துடனும், மலைநாட்டுத் தலைவர்களுடனும் ஒன்றுசேர்ந்து இயங்கும் மனப்பான்மை கொண்டிருந்தார்.

### ட்ரயல் அட்பார் வழக்கு

தமிழ்த்தலைவர்கள் மீதான 'ட்ரயல் அட்பார்' வழக்கில் நான்கு எதிரிகளும் வழக்கை நடத்தும் நோக்கத்துடன் கொழும்பிற்குச் செல்லவில்லை. குற்றச்சாட்டுகளை ஏற்று சிறைச்சாலைக்குச் செல்லும் எண்ணத்துடனேயே கொழும்பு சென்றனர். ஆனுல்இந்தச்சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி எமது பிரச்னையை உலகறியச் செய்ய வேண்டும் என்ற முடிவை அமரர் திருச்செல்வம் எடுத்தபோது அவர்கள் கட்டுப்பட்டு வழக்கை நடத்தச் சம்மதித்தனர்.

தமிழ்பேசும் மக்களின் பிரச்னைகளை மட்டும் எடுத்துக்காட்டுவதுமட்டுமல்லாமல், தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டுள்ளனர் என உலகறியச்செய்ய வேண்டும் என்று தமிழ்த்தலைவர்களையும், சட்டத்தரணிகளையும் ஒன்ருக நீதிமன்றத்தில் ஏற்படச்செய்த பெருமை அமரர் திருச்செல்வத்தையே சாரும். இதற்காக அவர் பல தடவை அமரர் ஜி ஜி பொன்னம்பலத்தை நேரடியாகச் சந்தித்து சகல வேற்றுமைகளையும் நீக்கிவைத்தார்.

இப்படியான ஒருவரை கடைசி நிமிடத்தில் 'ட்ரயல் அட்பார்' வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நான்கு தமிழ்த் தலைவர்களும் அறிந்தபோது வியந்தனர்.

(தொடரும்)

**Regal** (Jaffna)
French Film Festival
Daily at 4-45 7 & 9-30 P. M. only
MONSIEUR PAPA
23-11-77 COUSIN COUSINE

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-30.
எம். ஜி. ஆர். நடித்த
தாயைக் காத்த தனயன்
(புதிய பிரதி)

6-வது வெற்றி வாரம்!
ராஜா யாழ்நகர் தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
கே.எஸ்.கோபாலகிருஷ்ணனின் அற்புதப் படைப்பு!
ஜெமினி, ஜெயசித்திரா கே. ஆர். விஜயா நடித்த
தசாவதாரம்
(கலர்)
(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)
[பாடசாலை மாணவர்கள் முன்கூட்டியே ஆசனங்களைப் பதிவு செய்துகொள்ளலாம்]

மனோஹரா (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்-ஜெமினி கணேசன்
சுப்பையா - லக்ஷ்மி - நிர்மலா நடிக்கும்
சுஜாதாவின்
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி (யாழ்ப்பாணம்) ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
மூத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்

வெலிங்டன் (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
துணிவே துணை

லிடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
(யாழ்.நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

## அரசு...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பெருக்கத்தினால் அரசாங்கம் பலவித பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியுள்ளது. இதற்காகக் குடும்பநலத் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது. ஆனால் இத்திட்டம் தமக்குத் தீமை விளைவிக்குமென்று மக்கள் வீணாக அஞ்சுகின்றார்கள். இதற்குக் காரணம், இத்திட்டத்தின் மூலம் அவர்களுக்குக் கிடைக்கும் குடும்ப சுகத்தைப் பற்றி அறியாதிருப்பதே. இத்திட்டத்தின் மூலம் தமது வாழ்வு சிறப்பது மட்டுமல்லாது நாட்டின் விருத்திக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளின் தீர்வுக்கும் வழிவகுக்க மக்கள் தயங்கக்கூடாது. மக்களுக்கு இத்திட்டத்தின் நன்மைகள் பற்றி எடுத்தியம்பி அவர்கள் இத்திட்டத்தில் நம்பிக்கை கொள்ளச்செய்வது சமூகத் தலைவர்களது கடமையாகும்''

யாழ். குடும்பத் திட்டப் பொறுப்பதிகாரி திரு. எஸ். கலாபரமேஸ்வரன் பேசுகையில் கூறியதாவது:

''ஒரு கோடி நாற்பது லட்சம் மக்கள் வாழும் இத்தீவில் அடுத்த 25 ஆண்டுகளுக்குள் சனத்தொகை இரட்டிப்பாகுமெனக் குடிநிலைப் புள்ளி மதிப்பீடு தெரிவிக்கிறது. ஆகவே இச்சனத்தொகைப் பெருக்கம் பற்றி நாம் சிந்தித்துச் செயல்படவேண்டியவர்களாயுள்ளோம். சனத் தொகைப் பெருக்கத்தினால் ஏற்படக்கூடிய உணவுத் தட்டுப்பாடு, இட நெருக்கடி, வைத்திய வசதிகள் போதாமை, வேலையின்மை போன்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் நாம் சிந்திக்கவேண்டும். குடும்பத்தைத் திட்டமிட்டுக்கொண்டால் இப்பிரச்சினைகள் பூதாகாரமாக உருவெடுக்காமல் தடுக்கமுடியுமென்பதை மக்கள் மனதில் வேரூன்றச்செய்ய வேண்டும்.''

சுகாதார வைத்திய அதிகாரி திருமதி ஜி. சுந்தரலிங்கம் பேசுகையில் ''ஆரோக்கியமும் ஆனந்தமுங் கொண்ட குடும்பங்களை உருவாக்குவதே குடும்ப சுகநலத்திட்டத்தின் குறிக்கோளாகும்'' என்றார்.

மற்றும் குடும்பத் திட்டத் தகவல் அதிகாரி திருமதி யோகா பாலச்சந்திரன், டாக்டர் மகோற்கடன் உட்பட மற்றும் பலர் பேசினர். (அ)

4-வது வாரம்
வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்.
உலகம் சுற்றும் வாலிபன்
(கலர்)

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-லதா
உழைக்கும் கரங்கள்

காணாமற்போன சிவக்கொழுந்து

# நகைகளின்றி சடலமாய் மீட்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

கந்தசஷ்டி விரதத்திற்குச் சகோதரி வீட்டில் சாப்பிடுவதற்காக மாலை ஐந்து மணிக்குச் சென்ற பெண்ணொருவர் கிணற்றிலிருந்து அழுகிய நிலையில் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டார்.

கோப்பாயைச் சேர்ந்த பிள்ளைப்பொடி சிவக்கொழுந்து என்ற 52 வயதான இப்பெண் அன்றையதினம் தமதுசகோதரி வீட்டுக்குச் சென்றபோது தாலிக்கொடி, சங்கிலி, 2 சோடி காப்பு முதலான நகைகள் அணிந்திருந்தாராம்.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். அமிர்தலிங்கம் மரணவிசாரணை நடத்தினார்.

கோப்பாயிலுள்ள சகோதரி இரத்தினம் வீட்டிற்குச் சென்ற சிவக்கொழுந்து திரும்பி வராததினால் பொலிஸாரிடம் புகார் செய்யப்பட்டதென்றும், சில தினங்களுக்குப்பின் கிணற்றில் அவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், விசாரணையில் கூறப்பட்டது.

அழுகிய நிலையிலிருந்த சடலத்தில் தோட்டைத்தவிர மற்றெந்த நகையும் காணப்படவில்லை.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு, விசாரணையை மரணவிசாரணை அதிகாரி ஒத்திவைத்தார். [க அ]

## உதைபந்தாட்ட மோதல்கள்

(அரியாலை)

யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரி மாணவ தலைவர்கள் கோஷ்டிக்கும் இன்ரரக்கிளப் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் 3-0 கோல்களால் பரியோவான் கோஷ்டி வெற்றிபெற்றது.

போட்டிக்கு திரு. கருணைநாயகம் மத்தியஸ்தம் வகித்தார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டிகளுக்கும் இடையில் யாழ். பரியோவான் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டிகளுக்கும் இடையில் பரி. யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதை பந்தாட்டப் போட்டியில் 1-ம் பிரிவுப் போட்டியில் 4-1 கோல்களாலும், மூன்றும் பிரிவுப் போட்டியில் 3-1 கோல்களாலும் வெற்றி பெற்ற பரியோவான் கல்லூரி இரண்டாம் பிரிவுப் போட்டியில் 1-2 கோல்களால் யாழ்ப்பாணக் கல்லூரியிடம் தோல்வியடைந்தது. (அ)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி தொழில் நுட்ப நிறுவனக் கோஷ்டிக்கும் காரைநகர் இ. போ. ச டிப்போ ஊழியர் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் தொழில்நுட்பநிறுவனம் 4-0 கோல்களால் வெற்றி பெற்றது.

தொழில் நுட்பநிறுவனத்திற்கும் வட்டு. இந்துக்கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற மற்றொரு உதைபந்தாட்டப் போட்டியில் வட்டு இந்துக்கல்லூரி 2-1 கோல்களால் வெற்றிபெற்றது

யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் தொழில்நுட்ப நிறுவனத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டி கோல்கள் எதுவுமின்றி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது (இ)

## நாடும் நடப்பும் —

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படிச் சில இளைஞர்கள் குரல் எழுப்பியுள்ளனர். தேநீரின்விலை நியாயமான அளவுக்கு இறங்காவிடில் ஒரு போராட்டமே ஆரம்பிக்கப் போவதாகவும் இளைஞர்கள் கூறிவருகின்றனர்.

ஃ ஃ ஃ

மழை விழுந்தாலும் விழுந்தது யாழ்ப்பாணப் பகுதியில் நுளம்புத்தொல்லைசகிக்கமுடியவில்லை,

யாழ். நகரின் பல வீதிகளிலும் வெள்ளம்போக முடியாமல் நீர்தேங்கிநிற்பதைப் பற்றி யாழ். மாநகர விசேஷ ஆணையாளர் திரு. க. சிவஞானத்திடம் விசாரித்தேன்.

கட்டடங்களைக் கட்டும்போது அதற்குரிய பிளான்களுக்கு முன்அங்கீகாரம் பெறுமல் கட்டிவிடுவதால் இந்தநிலை ஏற்பட்டதென்றும் இப்போது முன்அனுமதி பெருமல் எந்தக் கட்டிடமும கட்டுவதற்கு அனுமதிக்கக்கூடாதென்று தாம மாநகரசபை உத்தியோகத்தர்களுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் கூறினர்.

வீதிகளில் குப்பைகளைத் தொட்டினல் அப்புறப்படுத்தலாம கல்லையும மண்ணையும கொண்டுவந்து குவிப்பவர்களை என்ன செய்வது? என்று ஆணையாளர் என்னையே கேட்டார்.

என்னத்தைச் சொல்வது?

அவரே பதிலும சொன்னர்

இப்படிக் கல்லையும மண்ணையும் வீதிகளில் கொட்டிக் குவிப்பவர்கள்மீது வழக்குத்தொடர்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளாராம்.

நல்லதுதான் இளைஞரான ஆணையாளர் சுறுசுறுப்பாகப் பணியாற்றுகிருர். எல்லோருமே சுறுசுறுப்பாக இருந்து நகர மக்களும் ஒத்துழைத்தால் நகரம சொர்க்கமாகலாம.

— ஊர்சுற்றி

## நூல் அறிமுகவிழா

[சுழிபுரம்]

வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில், நாளை வட்டூர் சி. மருதபிள்ளையினுல் உரைஎழுதப்பெற்ற சுந்தரலங்கார நூல்அறிமுகவிழா நடைபெறும். இவ்வைபவத்திற்கு திரு செ. ஸ்ரீநிவாசன் தலைமை வகிப்பார்.

## இசைநிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

ஹஜ்பெருநாளை முன்னிட்டு யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில், இஸ்லாமிய பொப்பிசை நிகழ்ச்சியொன்று இன்று மாலை நடைபெறவுள்ளது. பாடகர் திரு ராமேஷ் வைகுந்தநாதன் இந்நிகழ்ச்சியை அளிக்கின்றார். (கே)

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
★ கமலஹாசன் ★ ரஜனிகாந்த்
★ எம். எஸ். விஸ்வநாத் ★ ஸ்ரீதேவி
★ ஒய். விஜயா ★ அநுபாமா
R. M. S. புரொடக்ஷன்ஸ் அளிக்கும்
மூன்று முடிச்சு
திரைக்கதை, வசனம், டைரக்ஷன் கே. பாலசந்தர்.

ரியோ (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30.
ஷம்மிகபூர்
புரொபஸர்
(PROFESSOR) (Hindi)
(Color)

நாகம்மா
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
ஜெமினி- வைஜெந்திமாலா
பார்த்திபன் கனவு

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642
ஹஜ் திருநாள் திரைவிருந்து
தினசரி 10-30, 2-30, 6-30 9-45
திலிப்குமார், வைஜயந் மாலா
டெய்சிராணி, ஜொனிவோக்கர்........
பாட்டாளியின்சபதம் [தமிழ்] புதிய பிரதி

**மணிவாக்கு**

எங்கள் அழுக்குகளை அகற்றி, அவச்சுத்தமடையாவிடத்து இறைவனை வணங்குவதற்கு யாமெவ்வாறு உரிமையுடையோம்.
— காந்திமகான்,


# ஈழநாடு
The Eelanaadu


## சதாத்தின் துணிச்சல்!

எகிப்திய அதிபர் அன்வர் சதாத்தின் இஸ்ரேலிய விஜயத்துக்கு எதிராக அரபு நாடுகள் பலவற்றிலும் வன்முறை ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்துள்ள போதிலும் அவரது விஜயம் வெற்றியென்றே சொல்லவேண்டும்.

அரபு மக்கள் அன்வர் சதாத்தின் இஸ்ரேலிய விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதில் நியாயமில்லாமலில்லை. ஆனாலும் மத்திய கிழக்குப் பிரச்னை தீராத பகைமைப்பிரச்னையாக முடிவின்றி வளர்ந்துகொண்டு போவதால் யாருக்கும் நன்மை கிடைக்கப்போவதுமில்லை.

இந்தவகையில் மத்திய கிழக்குப் பிரச்னைக்கு எப்படியோ ஒரு தீர்வுகாண முடியுமென்ற நம்பிக்கையுடன் துணிச்சலுடன் இஸ்ரேலுக்குச் சென்று சமாதான முயற்சிக்கு அத்திவாரமிட்டுள்ள அன்வர் சதாத்தைப் பாராட்டவேண்டும்.

இஸ்ரேல் நாட்டுக்குச் சென்றது மட்டுமல்லாது அந்நாட்டு ஆட்சிமன்றத்தில்நின்று சென்ற யுத்தத்தின்போது கைப்பற்றிய அரபுப்பிரதேசங்களிலிருந்து இஸ்ரேல்வெளியேறவேண்டுமென்ற திரு. சதாத்தின் துணிச்சல் போற்றற்குரியது.

பாலஸ்தீன மக்களின் பிரச்னைகளை தரகர்கள்மூலம் எடுத்துக் கூறுவதனாலோ, அந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு வல்லரசுகளிடமிருந்து ஆயுதம் வாங்கி மக்களைப் பலியிடுவதாலோ, பிரச்னைக்குத் தீர்வுகாண முடியாது என்பது கடந்த கால அனுபவம்.

இஸ்ரேல் என்ற ஒரு நாடு அமைந்துவிட்டது. இனி அதை இல்லாமல் செய்வதென்பதும் சுலபமல்ல.

பாதிக்கப்பட்ட பாலஸ்தீனிய மக்களுக்கு நிவாரணம் தேடவேண்டியதுதான் அவசியம்.

பெருந்தன்மையுடனும் துணிச்சலுடனும் அன்வர் சதாத் இஸ்ரேலுக்கு நேரில் சென்று அரபுமக்களின் நிலைமையை எடுத்துக்கூறியிருக்கிறார்.

போர் மூலம் உண்மையான சமாதானம் ஏற்பட முடியாதென்பதை இஸ்ரேலியத் தலைவர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

அன்வர்சதாத்தின் பெருந்தன்மைக்குப் பிரதி உபகாரமாக இஸ்ரேலியர்கள்கடந்த யுத்தத்தில் கைப்பற்றிய பிரதேசங்களிலிருந்து வெளியேறி எகிப்தியத் தலைவரை அரபு நாடுகள் பின்பற்றிச் செல்லக்கூடியதாகவாவது வழிவகுக்கவேண்டும்.

அன்வர் சதாத்துக்கு எதிராகப் புரட்சிசெய்யவேண்டும்; அவரைக்கொலைசெய்ய வேண்டும் என்றுகூட அரபு நாடுகள் சில குரல்கொடுக்கின்றன.

இச்சமயத்தில் தாம் கைப்பற்றிய அரபுப் பகுதிகளிலிருந்து இஸ்ரேலியர்கள் வெளியேறுவதற்குத் தீர்மானித்தால் இதைவிடப் பெரிய கைம்மாறு வேறு எதுவும் இருக்கமுடியாது. மத்திய கிழக்குப் பிரச்னைக்கும் தீர்வுகாணும் நல்லகாலமும் பிறந்துவிடுமென்று எதிர்பார்க்கலாம்.

# தமிழன் எங்கு வாழ்ந்தாலும் குரல் கொடுப்பவர் கலைஞர்!

— அ. அமிர்தலிங்கம்

## "கருணாநிதியை சிறையில்வைப்பது ஜனநாயகத்துக்கு முரணானது"

[யாழ்ப்பாணம்]

'மனித உரிமைகள் மறுக்கப்படுவது ஜனநாயகத்திற்கு அடிக்கப்படும் சாவு மணிக்குச் சமமானது.

தமிழக முன்னாள் முதல்வரும், எதிர்க்கட்சித் தலைவருமான கலைஞரை விடுதலை செய்யுமாறு கோரி, நேற்று முன்தினம் நடாத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை அடுத்து இடம்பெற்ற எழுச்சிக் கூட்டத்தில் தமக்களிக்கப்பட்ட மகஜரை கையேற்று உரை நிகழ்த்திய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்

நல்லூர் கல்யாண மண்டபத்தில் இரா. புவனேந்திரன் தலைமையில் நடைபெற்ற எழுச்சிக் கூட்டத்தில் உரையாற்றிய திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது: 'மனிதனது உரிமைகள் மறுக்கப்படுவது ஜனநாயக மரபுக்கு முரணானது என்ற காரணத்தாலும், எதிர்கட்சித் தலைவர் என்ற காரணத்தாலும், கலைஞரை விடுதலை செய்யவேண்டும் என்று நான் ஏற்கனவே தந்தி மூலம் இந்தியப் பிரதமரை கேட்டுள்ளேன்.

'அண்மையில் கூட இந்தியத் தூதுவர் திரு. குர்பச்சான் சிங்கிடம் தமிழ் இளைஞர்களின் கோரிக்கை பற்றியும் எடுத்துக்கூறி, முறைப்படி இளைஞர்களின் மகஜரைத் தங்களிடம் கையளிப்பேன் என்றும் உறுதி கூறியுள்ளேன்.

இந்தியாவின் வாலாற்றிலும், தமிழ் நாட்டின் சகாப்தத்திலும் அமரர் அண்ணாத்துரையுடன் தோளோடு தோள்நின்று உழைத்தவரும், உலகில் எங்கெங்கு தமிழன் வாழ்கிறானோ அங்கெல்லாம் தமிழர் உரிமைகள் பறிக்கப்படுகின்ற போது அதுகண்டு கொதித்தெழுந்து குரல் கொடுத்தவர் கலைஞர் கருணாநிதி. அவரது விடுதலை ஜனநாயகத்தின் விடுதலையாகும்' என்றார்.

சட்டத்தரணி திரு. சிறீகாந்தா தமதுரையில், தமிழ் நாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருப்பது ஜனநாயகத்திற்கு முரணானது. இலங்கையில்கூடக் கடந்த அரசாங்கம் ஜனநாயகத்திற்கு முரணான வகையில் நீதிமன்றத்திற்கு எதிரான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு பொலிஸாரால் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் எடுத்து அரசுக்கெதிரானவர்கள் என்று இளைஞர்களைச் சிறையில் தள்ளியது! ஜனநாயக பாரம்பரியத்தையும், ஜனநாயகக் கோட்பாடுகளையும் மதிக்கின்றவர்கள் என்ற வகையில் இன்றைய இளைஞர்கள் கலைஞரது விடுதலை செய்யக் கோருவது நியாயமானது. வியட்நாமில் பௌத்தர்களுக்கு அநீதிகள் இழைக்கப்பட்ட போது பௌத்தர்கள் கிளர்ந்தெழுந்தார்கள். அதேபோன்று ஈழத்தில் தமிழர்களின் இன்னல்களுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர் கலைஞர். கலைஞரைக் கைது செய்து சிறையில் வைத்திருப்பதன் மூலம் தமிழ்நாடு அரசு தனக்குத்தானே புதைக்குழி தோண்டுகின்றது. ஏனென்றால் எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதியிலும் பார்க்க சிறையிருக்கும் கருணாநிதியின் சக்தி வலுமிக்கது' என்றார்.

இக்கூட்டத்தில் ஈழவிடுதலை இயக்கத் தலைவர் திரு. த. முத்துக்குமார சுவாமியின் சார்பில் சோதிலிங்கமும், கோவைநந்தன், வரதராசா ஆகியோரும் உறையாற்றினர். சத்தியகுமார் நன்றியுரைவழங்கினர்

[கா]

### சார்ஜன்ட் மாரடைப்பால் மரணம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜண்ட் ஒருவர் காலமானார்.

வியாங்கொடையைச் சேர்ந்த சோமச்சந்திரா என்ற பொலிஸ் சார்ஜன் கடமையில்ஈடுபட்டிருந்த போதே இவ்வாறு மரணமானார்' என்று தெரிகிறது.

இவரது பூதவுடல் சகல பொலிஸ் மரியாதையுடனும் வியங்கொடைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் யாழ். உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஜேசெவ் செய்துள்ளார்.

(கா-இ)

### மாரடைப்பால் மரணம்

(மாவிட்டபுரம்)

19 வயது யுவதியை மாரடைப்பு நோய் பலிகொண்டது. மல்லாகத்தைச் சேர்ந்த நந்தினி நடராசா என்பவரே மரணமானவராவார்.

இவரது மரணம் குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா விசாரணை நடத்திய சமயம் இவருக்கு நெஞ்சில் இருந்து வந்த அடைப்பு நோய் காரணமாக பல இடங்களில் வைத்தியம் செய்ததாகவும் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியிலும் சிகிச்சைக்காக அவரை அனுமதித்த போது திடீரென மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### முக்கிய—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து பல்வேறு கொள்ளைகளிலும் சம்மந்தப்பட்டவர்கள் மீது நெருக்கமான வலை வீசப்பட்டுள்ளதென்றும் 10 சந்தேக நபர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிகிறது, [க]


விரைவில் வெளியாகின்றது!

## 'ஈழநாடு' தினக்குறிப்பு 1978

தொடர்புகொள்க:

"தினக்குறிப்பு 1978"

ஈழநாடு

த. பெ. எண். 49, யாழ்ப்பாணம்.

7747


## மரண அறிவித்தல்

### திரு. கந்தையா சாமியார்

காங்கேசன்துறை வீதி கமலேஸ்வரி ஸ்ரோர்ஸ் உரிமையாளர் திரு. கந்தையா சாமியார் காலமானார். இவர் தங்கம்மாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற குமாரசாமி, கனகம்மா ஆகியோரின் சகோதரரும் பொன்னம்மா, காலஞ்சென்ற ஆறுமுகம் (காட்டு இலாகா) அவர்களின் மைத்துனரும், தணிகாசலம், மகேஸ்வரி, கமலேஸ்வரி, சுந்தரலிங்கம் (சீனிக்கூட்டுத் தாபனம்), பஞ்சாட்சரலிங்கம், மகேந்திரலிங்கம், ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனருமாவார். அன்னாரின் பூதவுடல் இல. 3, இரண்டாம் ஒழுங்கை பலாலி வீதியில் இருந்துசெவ்வாய்க்கிழமை (22-11-77) பி. ப. 4-30. மணிக்கு வில்லூரன்ற் மயானத்துக்கு தகனக்கிரிகைக்காக எடுத்துச்செல்லப்படும். உற்றார் உறவினர் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தகவல்: ஆ. பஞ்சாட்சரலிங்கம் (மருமகன்). 7748

## நாடும் நடப்பும்

சீனிவிலை குறைந்துவிட்டதா?

யாழ்ப்பாண மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திடம் நேற்று இதுபற்றிக் கேட்டபோது பங்கீட்டுக்கு அப்பாற்பட்ட சீனி அதாவது இருத்தல் மூன்று ரூபாயாக விற்கப்படவேண்டிய சீனி இன்னமும் வரவில்லையென்றும் நாளை (அதாவது இன்று) அது வந்து சேரலாமென்றும் தெரிவிக்கப்பட்டது.

வேறு சில சங்கங்கள் கையிருப்பிலுள்ள சீனியை குறைக்கப்பட்ட விலைக்கு விற்கின்றனவாம்.

சீனியின் விலை மூன்று ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ள போதிலும் அது பல மாவட்டங்களிலும் இன்னும் சரியாக அமுலுக்குவரவில்லை

கொழும்பில்கூட இன்னமும் பெரும்பாலான தேநீர்க் கடைகளில் தேநீரின்விலை அறுபது சதத்திலிருந்து இறங்கவில்லையாம்.

யாழ்ப்பாணத்தில் என்னவோ பெரியமனதுபண்ணி சில கடைகள் தேநீரின் விலையை ஐம்பது சதத்திலிருந்து நாற்பது சதமாகக் குறைத்திருக்கின்றன.

இருத்தல் ஐந்து ரூபா சீனி விற்கப்பட்டபோது ஒரு கப் தேநீர் ஐம்பதுசதத்துக்கு விற்கப்பட்டது; இருத்தல் மூன்று ரூபாயாக சீனியின் விலை குறைக்கப்பட்டதால் ஏன் ஒரு கப் தேநீரை முப்பது சதத்துக்கு விற்கக்கூடாது?

[5-ம பக்கம பார்க்க]


## யமஹா

சகல கடல் தொழிலாளர்களையும் அழைக்கிறது!

மண்ணெண்ணை விலை குறைப்பினால்

டிசம்பர் முதல்

8 H. P, 15 H. P.

மண்ணெண்ணை அவுட்போட் மோட்டர்கள் விற்பனைக்குள்ளன.

பர்மிட்டுகள் தேவையில்லை

ரொக்கப்பணம் செலுத்திப் பொருளை எடுத்துச்செல்லும் வசதி.

உடன் தொடர்பு கொள்க.

கொன்சலிடேட்டட் என்ஜினியரிங் கம்பெனி

101, கியூரோட், கொழும்பு-2.

தொலைபேசி: 35464 அல்லது 35009

தந்தி: கெரூமறின்

உங்கள் தேவைக்கு முந்துங்கள்.

முதலில் வருபவர் முதல் பெறுவர்.

7741


## மரண அறிவித்தல்

### திருமதி. செல்வலஷ்சி செல்வரத்தினம்

இவர் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியையும், யாழ். இந்துக் கல்லூரி இளைப்பாறிய ஆசிரியர் M P. செல்வரத்தினத்தின் மனைவியும், சுசீலாராணி, ரங்கராஜ் (Officer Merchant Ship), ஜெயராஜ் (U. K.), காலஞ்சென்ற செல்வி ரூபராணி ஆகியோரின் தாயாரும், திரு. K. தங்கராசா (தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் ஆனையிறவு), திருமதி ஜெரல்டீன் ஆகியோரின் மாமியாரும், S. R. அரியரத்தினம் (இளைப்பாறிய கல்லூரி அதிபர்) S. R. இராசசிங்கம் [வர்த்தகர்] ஆகியோரது சகோதரியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 22-11-77 செவ்வாய்க்கிழமை நண்பகல் உடுப்பிட்டியில்நடைபெறும். உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். 7746


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல்வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka